

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதி ஆவடி மாநகராட்சியில் பல்வேறு வார்டுகளில் ரூ. 9.66 கோடி மதிப்பீட்டில் தார் சாலை சிமெண்ட் சாலை சிறுபாலம் பேருந்து நிறுத்தம், மழை நீர் வடிகால் , அமைக்கும் பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அருகில் மேயர் உதயகுமார் ஆணையர் சரண்யா, மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், வி.அம்மு, ஜோதிலட்சுமி சன்பிரகாஷ், பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், சத்திய கோ.ரவி, சுகன்யா சதீஷ்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன் – மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சேலம், டிச.14-

சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று (13.12.2025) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப்பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல்வேறு சிறப்புதிட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் குறிப்பாக, மக்களைத்தேடி மருத்துவம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48 திட்டம், முதல்வர் மருந்தகம் திட்டம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெருவோம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், சிறுநீரகம் பாது காக்கும் சீர்மிகு திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம், பாதம் காப்போம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் போன்ற பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு முன்னோடி திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தை பொருத்தவரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு 3 வீதம், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் - 20 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் - 57 முகாம்களும், 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் - 15 முகாம்களும் என மொத்தம் - 1,256 முகாம்கள் நடத்தப்படும் என அறிவித்து இன்றைய தினம் 21 வது முறையாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் விதமாக வாரம் 2 நாட்கள் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் 32 மாவட்டங்களில், 45 இடங்களில் "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம்கள் நடைபெறுகிறது. இம்முகாமில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்கள் இம்முகாம்களின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

இம்முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்தியமுறை மருத்துவம் என 17 வகையான மருத்துவ சேவைகள் இம்முகாம்களின் மூலம் வழங்கப்படுகிறது.

குறிப்பாக, இம்முகாம்களின் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற சேவைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு முழுவதும் கடந்த வாரம் வரை நடத்தப்பட்ட நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் வாயிலாக 41,324 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று கடந்த வாரம் வரை 32,514 நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு புதிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 683 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடத்தப்பட்டதன் மூலம் 10,58,286 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இம்முகாமானது 6 மாவட்டங்களில் முழுமையாக முடிவுற்று எஞ்சிய 32 மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் மட்டும் நடைபெறும் முகாம்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 65,000க்கும் மேற்பட்டோர் பயன் பெற்றுள்ளனர்.

மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தின் வாயிலாக 11.23 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இச்சிறப்பான திட்டத்திற்கு இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து வரவேற்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.தேவி மீனாள், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு. நந்தினி, மாநகர நல அலுவலர் மரு.முரளிசங்கர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உள்ள BC/OBC மக்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக

# ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச.14-

தமிழ்நாட்டில் உள்ள BC/OBC மக்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளதா?

அப்படியானால், கடந்த நான்கு நிதியாண்டுகளில் OBC மற்றும் BC சமூகங்களுக்கான சிறப்பு மத்திய உதவி, OBC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை மற்றும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NBCFDC) ஆகியவற்றின் கீழ் தமிழக அரசுக்கு விடு விக்கப்பட்ட நிதியின் விவரங்கள் தருக?.

தமிழ்நாட்டில், குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள BC/ OBC சமூகங்களைச் சேர்ந்த மக்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்ய மத்திய அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தலுக்கான ராஜாங்க அமைச்சர் பி.எல்.வர்மா எழுத்து பூர்வமாக கூறிய பதில் விவரம்

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (ஓபிசி) நலனுக்காக பின்வரும் திட்டங்கள் மூலம் நிதி ஒதுக்குகிறது:

ஓபிசி மற்றும் பிறருக்கான துடிப்பான இந்தியாவிற்கான பிரதமர் இளம் சாதனையாளர் உதவித் தொகை விருது திட்டம் பின்வரும் கூறுகளுடன்:

i. ஓபிசி, ஈபிசி மற்றும் டிஎன்டிகளுக்கான முன் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்:

ii. ஓபிசி, ஈபிசி மற்றும் டிஎன்டிகளுக்கான மெட்ரிக் பிந்தைய உதவித் தொகை திட்டம்:

iii. ஓபிசி, ஈபிசி மற்றும் டிஎன்டிகளுக்கான பள்ளிகளில் உயர் வகுப்பு கல்வி

iv. ஓபிசி, ஈபிசி மற்றும் டிஎன்டிகளுக்கான கல்லூரி யில் உயர் வகுப்பு கல்வி

ஓபிசி ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விடுதி கட்டுமானம்.

(II)இளம் சாதனையாளர்களுக்கான உயர்கல்வி உதவித்தொகை திட்டம் (SHREYASOBC) பின்வரும் கூறுகளைக் கொண்டது:

i.OBC மாணவர்களுக்கான தேசிய கல்வி ஊக்கத்தொகை

ii. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBCs) மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினர் (EBCs) ஆகியோருக்கான வெளிநாட்டுப் படிப்புகளுக்கான கல்விக் கடன்களுக்கான வட்டி மானியத்திற்கான டாக்டர் அம்பேத்கர் திட்டம்.

(III) வஞ்சித் இகை சமூஹ் அவுர் வர்கோன் கோ ஆர்திக் சகாய்தா (VISVASBC)

(IV) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான துணிகர மூலதன நிதி (VCF BC)

கடந்த நான்கு ஆண்டுகளில் OBC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டத் தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் திற்கும் தேசிய பிற்படுத்த ப்பட்ட வகுப்பு நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் (NBCFDC) வெளியிடப்பட்ட நிதி இணைப்பில் உள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர, VISVASBC திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 38,615 பயனாளிகளுக்கு DBT முறையில் ரூ. 4.05 கோடி வழங்கப்பட்டுள்ளது, மேலும் ரூ. கடந்த 4 ஆண்டு களில் VCFBC திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள BC தொழில்முனைவோருக்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களுக்கு 5.13 கோடி வழங்கப் பட்டுள்ளது.

துறையில் OBC மற்றும் BC சமூகங்களுக்கு சிறப்பு மத்திய உதவி என்ற எதுவும் இல்லை.

தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBC) நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், அவற்றின் முன்னேற்றம் மற்றும் பரவலைக் கண்காணிப் பதற்கும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற மாநிலங்கள்/ITகளுடன் வழக்கமான கைகோர்ப்பு கூட்டங்கள் / பணியாற்றல்கள் விபரம்

i.மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் வழக்கமான நேரடி கூட்டங்கள்/ பட்டறைகளை நடத்துதல், சமீபத்தில் சென்னையில் அக்டோபர் 27, 2025 அன்று நடைபெற்ற பிராந்தியக் கூட்டம் உட்பட;

ii. தேசிய உதவித்தொகை போர்ட்டலில் திட்டங்களில் சேருவது குறித்து;

iii.அதிக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கும் போலித்தனத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆன்லைன் பரிவர்த்தனை மூலம் தகுதிச் சான்றுகளை ஆன்லைனில் முழுமையாகச் சரிபார்த்தல், சரிபார்த்தல்;

iv.தேசிய அளவில், பிராந்திய அளவில், மாநில அளவில் கூட்டங்களை நடத்துவதன் மூலமும், மூத்த அதிகாரிகளின் கள வருகைகள் மூலமும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல்; மற்றும்

V. மூன்றாம் தரப்பு மதிப்பீட்டு ஆய்வுகள் மூலம் திட்டங்களை செயல் படுத்துவதை அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல்.

vi. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர் களுக்கு நிதியைப் பெறு வதற்கு கல்வி கற்பிக்க IFCI வென்ச்சர் பல மாநாடுகள் / கருத்தரங்குகள் / பட்டறைகள்/இணையவழிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வருகிறது.

vii. IFCI வென்ச்சர் ஒரு ஆன்லைன் வழிகாட்டுதல் போர்ட்டலைத் தொடங்கி யுள்ளது, இது தமிழ்நாடு உட்பட அனைத்து மாநில் களிலும் செயல்படு கிறது, அங்கு பல்வேறு பகுதிகளில் ஆர்வ முள்ள விண்ணப்பதாரர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் கையேடு ஆதரவை வழங்குகிறது. போர்ட்டலுக்கான இணைப்பு ayementor.in.

viii. தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களுக்கும் திறந்திருக்கும் திட்ட விளம்பரத்திற்காக, சமூக ஊடகையாளுகளான ட்விட்டர், பேஸ்புக், லிங்க்ட்இன் மற்றும் இன்ஸ்டாகிராம் மூலம் சந்தைப்படுத்தல் தொடர்ந்து செய்யப்படுகிறது.

1.கடந்த நான்கு ஆண்டுகளில் OBC, EBC மற்றும் DNTகளுக்கான (PM YASASVI) போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு விடுவிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் பின்வருமாறு:

2021-22ல் ரூ.160.79, 2022-23ல் ரூ.135.00, 2023-24ல் ரூ.82.97, 2024-25ல் ரூ.119.37

2.கடந்த நான்கு ஆண்டுகளில் NBCFDC கடன் திட்டங் களின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு விடுவிக்கப் பட்ட நிதியின் விவரங்கள் பின்வருமாறு:

2021-22ல் ரூ.83.38, 2022-23ல் ரூ.104.57, 2023-24ல் ரூ.116.62, 2024-25ல் ரூ.125.97

3. தமிழ்நாடு மாநிலத்தில் OBCகளுக்கான தேசிய பெல்லோஷிப் (NF OBC) மத்திய துறை திட்டத்தின் கீழ் NBCFDC யால் தகுதியான பெல்லோஷிப்களுக்கு வெளியிடப்பட்ட நிதியின் விவரங்கள் பின்வருமாறு:

2021-22ல் ரூ.2.79, 2022-23ல் ரூ.2.12, 2023-24ல் ரூ.3.84, 2024-25ல் ரூ.5.83

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, பம்மல் வடக்கு பகுதி 30 ஆவது வட்டம், பாகம் எண் 428 ல் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி கூட்டம் நடைபெற்றது". நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் சிறப்புரையாற்றினார். பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், பகுதிகழக நிர்வாகிகள் கே.சந்திரன், மு. ஸ்ரீதர், இரா.குமரேசன், இரா.பாபுஜி, வட்டக் கழக செயலாளர் இ.பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### "திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# எண்ணூர் கடற்கரையில் "என் வாக்குச் சாவடி! வெற்றி வாக்குச் சாவடி"!

## எஸ்.மோகன் – வை.ம. அருள்தாசன் பங்கேற்பு! டி.சேகர் முன்னிலை!

சென்னை,டிச.14-

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி முழக்கத்தை செயல்படுத்திடும் வகையில் சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக இரண்டாவது வட்டம் , பாகம் 58ல் வட்ட கழக செயலாளர் டி.சேகர் முன்னிலையில் எண்ணூர் பெரிய குப்பம் கடற்கரையில் திறந்த வெளியில் மீன் பிடி படகுகளுக்கு இடையே வித்தியாசமான முறையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கழக மாநில வர்த்தகர் பிரிவு துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ்.மோகன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் அருள் தாசன் இந்த கூட்டத்தில் பங்கேற்று தினந்தோறும் பாகம் பாகமாக நிர்வாகிகளோடு வீடு வீடாக எவ்வாறு பரப்புரை செய்ய வேண்டும் என்றும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்களை வாக்காளராக சேர்த்ததை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், வர இருக்கிற வாக்காளர் வரைவு பட்டியலை எவ்வாறு சரி பார்த்திட வேண்டும் என்கிற தலைமைகழகம் அறிவுறுத்திய வழிகாட்டு நெறிமுறைகளை மற்றும் அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் எடுத்துக் கூறினார்.

வித்தியாசமான முறையில் கடற்கரையில் நடைபெற்ற இந்த கூட்டத்தை மீனவர்கள் பெரிதும் ரசித்து பார்த்து மீனவர்களுக்கு கழகத் தலைவர் ஆற்றிய சாதனைகளை நினைவு கூர்ந்து மகிழ்ந்தனர்.

இந்த கூட்டத்தில் பகுதி கழக பொருளாளர் எம். வஜ்ரவேல் மாவட்ட பிரதிநிதிகள் எம்.சந்திரகுமார் ந. ராம்குமார், டி.எஸ்.மணி மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் டி. சக்கரவர்த்தி, பிரட்சுரேஷ், ஆர். மதன்குமார், டி. கண்ணன், சி. சேகர்,எஸ்.தேவி, சத்தியமூர்த்தி, எஸ். ராஜேஷ், மு. பாபு, சி. முத்துககுமார்,ம. சுந்தர், பா.அஜித், சி. ஜெயப்பிரகாஷ்,எஸ். சதீஷ், ஜெ. விக்னேஷ், ஜெ. மாரிமுத்து, எஸ். கௌதம், வி.தேசப்பன், BLA &2 மகேஷ், BDA யு.மாதேஷ், ரமேஷ் ரோனி, டைட்டஸ், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




ஆலந்தூர் தெற்கு பகுதி 167 வது வார்டில் உள்ள பாகம்–348 மற்றும் பாகம் 349 ஆகிய பாகங்களில் "என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி கூட்டத்தில் பாக முகவர்கள் த. பாலாஜி (348) ரா.குருமூர்த்தி (348) ஆகியோர் தலைமையில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன், ஆலந்தூர் தொகுதி பொறுப்பாளர் திருமதி பத்மபிரியா, கலந்து கொண்டு வாக்கு சாவடி பூத்து உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கினர். இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், 167–வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167 வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் வீ.ரமணா, அபிஷேக் கிருஷ்ணா, மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.